முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1055

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.08.2022**, வெள்ளிக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதா சிவ சற்குருவே
கார்மேகமாய் கருணைகொண்டு உலகோர்க்கு
கணக்கில்லா மாதர்மம் புரிகின்ற வள்ளலே
2. வள்ளலே ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 03 நாள், 19.08.2022 வெள்ளிக்கிழமை)
ஐயமிலா உன் மார்க்கம் இந்த கலியுகத்தை
அழிவிலிருந்தும் ஆபத்திலிருந்தும் மீட்கக்கூடும்
3. கூடாத எதிர்மறை நிலைகளெல்லாம்
குவலயத்தை விட்டு தானாக ஓடும்
இடரென கலியை வெல்லுகின்ற இடரென கலியை துன்புறுத்துகின்ற
எல்லா சிக்கலும் அரங்கன் உன்னருளால் அகன்றோடும்
4. அகன்றோடும் அற்புதத்தை ஆறுமுகன்
அரங்கன் உன்னை கொண்டு கலியில் நடத்துவேன்
தடையற உன் சன்மார்க்கத்தை
தவமாக கலியுகத்தில் வேள்வியாக எவர் ஏற்று உன்னை தொடர்கின்றாரோ
5. தொடருகின்ற மக்களெல்லாம் துன்பம் விலகி
இடரின்றி இந்த கலியில்
எல்லா வரமும் பெற்று
அமைதிபட வாழ நேரும்
6. நேர்மைகொண்டு நீ தருகின்ற தர்மமும் சன்மார்க்கமும்
நிலவுலகிகத்தில் மக்களுக்கு இருகண்களாகும்
ஆகவே அவர்கள் அந்த ஒளிகொண்டு
ஆற்றல்பட ஞானத்தை பின்பற்றினால்
7. அனைவருமே அழியாமை என்கின்ற ஞானியாகி
அரங்கன் உன் வழி உலகத்தையும் மாற்றி பெரும் பேறுகாண்பர்
காணவே அரங்கனுக்குள் யானிருக்கேன்
கண்டு வணங்கி தீட்சை பெற்று
8. தொண்டர்களாகி உலகோர் இணைந்தால் போதும்
இந்த தேசம் தூய தேசமாகும்
ஞானவான்கள் ஆட்சியாகவும் மாறி
ஞான ஆட்சியும் மக்களை காக்கின்ற பாதுகாப்புமிக்க மகான்கள் ஆட்சியாகவும் மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–